Prohibition Cases.

* 110 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Handlooms and Khadi be pleased to state—

(a) the number of cases registered against illicit distillers of arrack and alcohol in the State, from 3rd October 1978 to 30th June 1980; and

(b) the number of cases registered during the above period, for transport and consumption of the prohibited drinks?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : (அ) 3—10—1978 முதல் 30—6—1980 வரை கள்ளத்தனமாக சாராயம் மற்றும் ஆல்கஹால் முதலிய வற்றைத் தயாரித்தவர்களின் மீது தொடரப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை—57,560.

(இ) 3—10—1978 முதல் 30—6—1980 வரை கள்ளச் சாராயம் கடத்தியவர்களின் மீது தொடரப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை—50,108.

3—10—1978 முதல் 30—6—1980 வரை கள்ளச்சாராயம் குடித்ததற்காக தொடரப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை—1,16,236.

திரு க. இராமமூர்த்தி : கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களின் மீது தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 57 ஆயிரம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அனுபவத்தின் அடிப்படையில் அரசாங்கம் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? கள்ளச் சாராயம் குடித்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் 1,16,236 என்று தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே அதிகாரிகள் அளவிலே கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? எத்தனை மாநில அரசு அதிகாரிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன? எத்தனை மத்திய அரசு அதிகாரிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : இந்த எண்ணிக்கையைப் பார்த்து மேலும் சட்டத்தைச் செயலாக்குவதற்கு மதுவிலக்குச் சட்டத்தை அரசு மீண்டும் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறது. மற்றும் தனிப்பட்ட முறையில் அரசு அதிகாரிகள், மத்திய அரசு அதிகாரிகள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை என்ற குறிப்புகள் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : நம்முடைய மாநிலத்தில் மிகக் கடுமையான சட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இந்த அளவிற்கு மதுவிலக்குச் சட்ட மீறல்கள் நடைபெற்றிருக்கின்றன என்றால், மதுவிலக்குச் சட்டம் சரியாக அமுல்படுத்தப்படவில்லை என்பது உண்மையா அல்லது மதுவிலக்குக் கொள்கையிலே அரசு தாராளத் தன்மையைக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : சட்டத்தைக் கடுமையாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. சந்தோஷம் : கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக கிட்டத்தட்ட 57 ஆயிரம் பேர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உண்மையில் கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களில் பத்தில் ஒரு பங்கு கூட இது இருக்காது என்று நினைக்கிறேன். அந்த அளவிற்குப் பரவலாக கள்ளச் சாராயம் காய்ச்சுவது நடந்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படிக் காய்ச்சுபவர்கள், காவல் நிலையங்களுக்கு மாமூல் கொடுத்துவிட்டு, இந்தச் செயலில் ஈடுபடுகிறார்கள் என்ற ஒரு பொதுவான கருத்து பொது மக்களிடையே நிலவுகிறது. இந்தக் கருததை அரசு கண்காணித்து வருகிறதா ? எந்த முறையில் கண்காணித்து வருகிறது? அப்படியானால் அதன் விளைவு என்ன ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : பொதுவான கருத்து பற்றி பதில் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன். குறிப்பாக நடந்த குற்றங்களைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், நடவடிக்கை எடுக்கப்ப;டும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தொடரப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றது எத்தனை ? எவ்வளவு பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : மூலக் கேள்வியில் எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்றுதான் கேட்டிருக்கிறார்கள். முடிவு பற்றித் தெரியாததால், தனிக் கேள்வியாகப் போட்டால், பதில் தர முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்வியில் இல்லை என்பதற்காகத்தானே துணைக் கேள்வியைக் கேட்கிறார்கள்.

1981 மார்ச் 2]

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்த மாதிரி குற்றங்களைச் செய்பவர் களின் எண்ணிக்கை, 1947 ஆம் ஆண்டிலிருந்து நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக அதிகமாகிக் கொண்டு வருகிறதா அல்லது குறைந்து கொண்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : இடையிலே ஏற்பட்ட சறுக் கலின் காரணமாக இது ஓரளவிற்குப் பெருகி வந்திருக்கிறது. அதைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர இந்த அரசு தீவிர நடவடிக்கையை எடுத்து வரு கிறது.

திரு. க. இராமமூர்த்தி : அரசாங்கம் எதிர்பார்க்கிற அளவிற்கு இதில் வெற்றி அடையாததற்குக் காரணம், கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்வதில் அரசியல் செல்வாக்குப் படைத்தவர்கள் ஈடுபட்டிருப்பதுதான் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அதைத் தடுக்க காவல் துறையினருக்கு எந்த அளவிற்குக் கடுமையான உத்தரவை இட்டிருக்கிறது இந்த அரசு ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : எந்த அரசியல் கட்சி ஈடு பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கூறவில்லை. அது அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : எந்தக் கட்சி ஈடுபட்டிருக்கிறது என்பது எல் லோருக்கும் தெரியும்.

திரு. ஆ. நல்லசிவன் : இவ்வளவு அதிகமான வழக்குகள் போடப்பட்டும் மதுவிலக்கைச் சரியாக அமுல்படுத்த முடியவில்லை என்று தெரிவதாலும், ஏற் கெனவே ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் எதிர்க் கட்சியினர் அபிப் பிராயத்தைத் தெரிவித்திருப்பதாலும், மதுவிலக்கு ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி, எந்தக் கட்சி இதில் ஈடுபட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும் என்று சொல்லியிருப்பது ஒரு கட்சியை மனதிலே வைத்துச் சொல்லியதைப் போலத் தெரிகிறது. அது அவைக் குறிப்பில் இருப்பது சரிதானா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எந்தக் கட்சியைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : நம் மாநிலத்தில் மதுவைக் குடிப்பதற்கு பெர்மிட்டுகள் தாராளமாக வழங்கப்படும் இந்தக் காலத்திலே கூட கள்ளச் சாராயத்தை மக்கள் மோகமாக விரும்பிக் குடிப்பதற்குக் காரணம் அதிலே போதை அதிகமாக இருக்கிறது என்பதுதான் என்று சொல்லுகிறார்கள். அதுபற்றி அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : அனுபவம் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அவைக்கு வாராதது குறித்து.

* *திரு. க. இராமமூர்த்தி* : தலைவர் அவர்களே, I rise on a poin of order. இந்த அவையினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை, தவிர்க்க முடியாத காரணத்தால் தேர்தல்கள் நடைபெறாத சூழ்நிலையில், குறைந்து வந்ததுபற்றி நாம் மிகுந்த கவலை கொண்டிருக்கிறோம். அது நம்மை மீறிய செயல் என்பதால் நடவடிக்கை எடுக்க இயலாமல் இருக்கிறோம். ஆனால் இடையில் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்து, அதிகார பூர்வமாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு மாத காலம் ஆகியும் கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இந்த அவைக்கு வரவில்லை. அவர் இன்னும் பதவிப் பிரமாணம்கூட எடுத்துக்கொள்ளவில்லை என்று தகவல். இந்த அவையில் நாம் இப்போது, வறட்சி நிலை பற்றியும் நிதிநிலை அறிக்கை பற்றியும், பல அவசரச் சட்டங்களைப் பற்றியும் இப்படித் தமிழகத்தோடு ஒட்டிய பல்வேறு முக்கியமான பிரச்சினைகளைப்பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கும்போது, அவை விவாதங்களில் பங்கேற்று தமிழகத்திற்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யாமல் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருப்பது இந்த அவையைப் புறக்கணிக்கிற செயலாக இருக்கிறது. இந்த அவையின் முக்கியத்துவம் கருதி இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.